Graduate, *v a* அதிகமேன்மைப்படுத்துகிறது, உயர்த்துகிறது, உயர்த்தபடியில், (வரிசையில்) வைக்கிறது 1 *To dignify with a degree in the University,* சர்வகலாசாலையிற்படிப்பவர்களுக்குப்பெயர்தரிக்கிறது, பட்டப்பேரிடுகிறது, படாபிஷேகம்பண்ணுகிறது
Graduate, *s* கல்விப்பட்டம்பெற்றவன்
Graff, *s* ஒட்டிபொருத்தம்
Graft, *s* ஒட்டவைத்தகிளை
Graft, *v a* ஒட்டவைக்கிறது, பொருதவைக்கிறது
Grafter, *s* ஒட்டவைக்கிறவன்
Grain, *s* தானியம், *growing,* பயிர், *as particle,* பொடி, சன்னம், மணி, *as texture of wood, &c,* மரமுதலியவற்றின்வைரநிறத்தின்வரி
Gram, *s.* கொள்ளு, *bag, for feeding horses,* தோற்பை, வாய்மொக்காணி
Gramineal, Gramineous, } *adj* புல்லுள்ள
Graminivorous, *adj* புல்லுமேய்கிற
Grammar, *s* இலக்கணம், வியாகரணம்
1 *The science of speaking correctly, the art which teaches the relations of words to each other,* திருத்தமாய்ப்பேசவிதிவிதிகளுங்கலக்கியானம், சொன்முடிபுபொருண்முடிபுகற்பிக்கும்வித்தை
2 *The book that treats of the various relations of words to one another,* இலக்கணநூல், இலக்கணப்புத்தகம்
Grammarschool, *s* இலக்கணப்பள்ளிக்கூடம், சாஸ்திரப்பள்ளிக்கூடம்
Grammarian, *s.* இலக்கணம்படித்தவன், இலக்கணநூல்செய்கிறவன், எழுததுஞ்சொல்லுப் பிழையறவுணர்ந்தோன்
Grammatical, *adj* இலக்கணத்துக்குரிய, இலக்கணமான, இலக்கணப்போங்கான, *use of a word,* இலக்கணவழக்கம், செய்யுள்வழக்கம்
Grammatically, *adv* இலக்கணமாய், இலக்கணவழக்கு.
Grampus, *s* கடற்பன்றி
Granary, *s* களஞ்சியம், தானியசாலை
Grand, *adj* மேன்மையான, பெருமையான, மகத்தான, *to be grand,* சிறப்பாயிருக்கிறது
Grandchild, *s* பேரப்பிள்ளை
Granddaughter, *s* பேததி
Grandee, *s* பிரபு, பெரியவன், மகத்தானவன்
Grandeur, *s* சிறப்பு, பெருமை
Grandfather, *s* பாட்டன்
Grandiloquence, *s* மகத்தானபேச்சு
Grandly, *adv* மகத்துவமாய், மகிமையாய்
Grandmother, *s* பாட்டி
Grandsire, *s* முற்பிதா, பாட்டன்
Grandson, *s* பேரன், பேரப்பிள்ளை
Granite, *s* கருங்கல்
Granitic, Granitical, } *adj.* கருங்கற்போன்ற
Granivorous, *adj* தானியம்பொசிக்கிற
Grant, *s* உபகாரம், தியாகம், ஈகை, அருள், தானபத்திரம்

Grant, *v. a* அருளுகிறது, அநுகூரகிக்கிறது, கொடுக்கிறது; *leave or permission,* இசாகொடுக்கிறது, உத்தரவுகொடுக்கிறது; *a certificate of honours,* உத்தியோகவரிசைக்குநற்சாட்சிப்பத்திரங்கொடுக்கிறது *a title,* பட்டங்கட்டுகிறது, *in argument,* ஒத்துக்கொடுக்கிறது, வைத்துக்கொள்ளுகிறது, *as I took it for* granted, *that he knew of this matter,* அவனுக்கு இதுவிஷயந்தெரியுமென்றுநான்ஒப்புக்கொண்டேன்

Grantable, *adj* கொடுக்கக்கூடிய

Grantee, *s* ஆதிக்கங்கொடுக்கப்பெற்றவன்.

Grantor, *s* உறுதிசெய்துகொடுத்தவன்.

Granular, *adj.* தானியமுள்ள, தானியம்போன்ற

Granulate, *v a.* மணியாக்குகிறது, சிறுபொடியாக்குகிறது.

Granulation, *s* மணியாக்கல், சன்னமாக்கல்

Granulous, *adj.* தானியமுள்ள, தானியம்நிறைந்த

Grape, *s.* முந்திரிகைப்பழம், திராட்சப்பழம்

Grapeshot, *s* அடிக்குக்குண்டு, வெடிக்கிறகுண்டு.

Graphic, Graphical, *a.* எழுத்துக்குரிய, சிறப்பாயெழுதிய

Graphically, *adv* விபரமாய், தூலக்கமாய்

Grapling, Grapnel, *s.* ஒருவகைநங்கூரம்

Grapple, சிக்கு, பிடி, மாட்டு, துறடு

Grapple, *v. a* சிக்கப்பண்ணுகிறது *with,* மல்லுப்பிடிக்கிறது, மல்லாடுகிறது

Grasp, *s* பிடி, பற்று, கைப்பிடி *It is in the tyrant's grasp,* அது அந்தக்கொடியன்கையிலிருக்கிறது

Grasp, *v. a* பிடிக்கிறது, பற்றுகிறது, கௌவுகிறது, பற்றிப்பிடிக்கிறது *with the mouth,* கவ்வுகிறது *too much,* அழுந்தப்பிடிக்கிறது *as take possession of,* அபகரிக்கிறது

Grasper, *s* பிடிக்கிறவன், பற்றுகிறவன்.

Grass, *s* புல், பில்லு

Grassbasket, *s* புல்லுக்கூடை, புற்கூடை

Grassgrown, *adj.* புல்லுப்பற்றியிருக்கிற, புல்லாயிருக்கிற

Grasshopper, *s.* வெட்டுக்கிளி

Grassiness, *s.* புல்லுள்ளதன்மை.

Grassy, *adj.* புல்லுள்ள, புல்லாயிருக்கிற

Grate, *s.* ஓர்வகைக்கிராதி, சன்னல் *for coals,* நெருப்புத்தட்டு

Grate, *v a.* அராவுகிறது, உராஞ்சுகிறது *as with a grater, &c* உராக்கிறது, தேய்க்கிறது

Grateful, *a* நன்றியறிவுள்ள, நன்றியுள்ள. *to the sense,* உரிசையுள்ள, இனிமையான

Gratefully, *adv* நன்றியறிதகுணமாய், நன்றியாய், நண்ணியாய்

Gratefulness, *s* நன்றியறிதகுணம் நன்றியுடைமை, செப்நன்றியுடைமை.

Grater, *s* திருவுமணை.

Gratification, *s.* இன்பப்படுத்துகை, இன்பம், இதமியம், மனப்பூரணம், திருத்தி

Gratified, *adj.* திருத்தியான, இரம்மியமான.

Gratify, *v a.* இதப்படுத்துகிறது, குளிரப்பண்ணுகிறது *desire,* மனதுக்குத்திருத்திபண்ணுகிறது, ஆசைதீர்க்கிறது

Gratifying, *ppr.* பிரியப்படுத்துகிற *discourse,* நயமானபேச்சு, நயப்புப்பேச்சு

Grating, *adj.* அராக்கிற, அழுத்துகிற

Gratingly, *adv* கொடுமையாய், கடுமையாய்.

Gratis, *adv* இலவசமாய், சும்மாய், வதிலீடில்லாமல், *to give gratis,* கைம்மாறில்லாமற்கொடுக்கிறது, சும்மாய்கொடுக்கிறது

Gratitude, *s* செய்நன்றி, நன்றியறிவு.

Gratuitous, *adj* இலவசமான, பதிலில்லாத

Gratuitously, *adv* உபகாரமாய், சும்மாய், இலவசமாய்

Gratuity, *s* உபகாரம், நன்கொடை, தானம்.

Gratulate, *v a* சோபனஞ்சொல்லுகிறது, வாழ்த்துகிறது

Gratulation, *s* மங்களம், வாழ்த்து, சோபனம்

Gratulatory, *adj* வாழ்த்துதலான

Grave, *s* சவக்குழி, சமாதி *walled,* கல்லறை, பிரேதஸ்தானம்

Grave, *v a* எழுத்துவெட்டுகிறது *to sculpture,* சித்திரம்வெட்டுகிறது

Grave, *adj* பாரதூரஆலோசனையுள்ள, விளையாட்டல்லாத

matter, கனத்தகாரியம், பெரியகாரிம்
to be grave, கனத்தயோசனைகொண்டிருக்கிறது, கண்டிப்பாயிருக்கிறது
Gravedigger, *s* வெட்டியான்.
Gravel, *s* மணல், பருக்கான்கல்,
a disease, கல்லடைப்பு, கல்லடைசல்
to have the gravel, கல்லடைப்பாயிருக்கிறது
Gravelly, *adj* காயுள்ள
Gravely, *adv* பயபத்தியாய், எண்ணிக்கையாய்
Graveness, *s* பயபத்தி, நெறுநெறுப்பு, அடக்கம்
Graver, *s* சித்திரங்கொத்துவோன், சித்திரங் கொத்துகிற உளி
Graveyard, *s* மசானம், சவக்கொல்லை, கல்லறை வாசல்
Gravid, *adj* கெர்ப்பங்கொண்ட
Gravidity, *s*. கெர்ப்பமாயிருக்கை, சூலாயிருத்தல், சூல்கொண்டிருத்தல்
Graving, *s* சித்திரவேலை, கொத்துவேலை
Gravitate, *v n* மையத்தைநாடுகிறது, மையத்தைகவர்ந்தோடுகிறது.
Gravitation, *a* மையத்தைநாடுகிறநாட்டம், மையத்துக்கோடுகிறஓட்டம், மையக்கவர்ச்சி
Gravity, *s* கனம், பாரம், பளுவு
specific, தன்பாரம், தனக்குள்ளபளுவு
Gravy, *s* கொழுப்பு
Gray, *adj* வெள்ளைநிறமான, நரையுள்ள
prematurely, பித்தநரையாய்.
Graybeard, *s* நரைத்ததாடியுள்ளவன்
Grayish, *adj* நரைத்த, வெளிறின
Grayness, *s* நரை, வெளிறினநிறம்
Graze, *v a* *as feed cattle with grass*, மேய்க்கிறது; மேயவிடுகிறது
as feed on, மேய்தல், தின்னல்
as touch lightly, நக்குகிறது, தடவுகிறது
Graze, *v a* பில்லுமேய்கிறது
as rub or brush against, சீக்கிறது
Grazier, *s* இடையன்
Grazing, *adj* மேய்கிற
Grease, *s* நெய்ப்பற்று, கொழுப்பு, எண்ணெய்ப்பிசுக்கு
Grease, *v a* நெய்பூசுகிறது, கைக்கூலிகட்டுகிறது
Greasily, *adv* பிசுபிசுப்பாய்
Greasiness, *s* பிசுபிசுப்பு
Greasy, *a* நெய்யுள்ள, பிசுபிசுக்கிற
to become greasy, பிசுபிசுக்கிறது, நெய்க்கசிவாகிறது.
Great, *adj* பெரிய, மகத்தான, மகா, மிகுதத, உயர்ந்த
sinner, பெரும்பாவி, மாபாவி.
distance, வெகுதூரம், நெடுந்தூரம்.
with child, பிள்ளைத்தாய்ச்சியான, கெர்ப்பங் கொண்ட
man, பெரியவன், பேர்கொண்டவன்.
way, தலைவழி
to become great, ஓங்குகிறது, வர்த்திக்கிறது, பெருகுகிறது
Greatgrandfather, *s* முப்பாட்டன்
Greatgrandmother, *s* முப்பாட்டி
Greatly, *adv* அதிகமாய், பெருமையாய்
Greatness, *s* மகிமை, பெருமை, உயர்ச்சி
merit, magnanimity, nobleness of mind, பெருந்தன்மை, கண்ணியம், யோக்கியம்
Greattoe, *s* காற்பெருவிரல்
Greaves, *pl* தோற்பாரம்
Greedily, *adv* பலுதித்தனமாய், அங்கலாய்ப்பாய்
Greediness, *n s* அங்கலாய்ப்பு, பேராசை பலுதித்தனம்
Greedy, *adj* அங்கலாய்ப்பான,
Greek, *s* கிரேக்கன், கிரேக்கபாஷை, தந்திரி, சூதன்
Green, Greenness, *s* பசுமை, பச்சை
light green, இளம்பச்சை
dark green, இருண்டபச்சை
Green, *adj* பச்சையான, பசுமையுள்ள, பசிய, பேதையான
as raw, அவியாத, பச்சையான, இளசான
grass, பசும்புல்
in quality, பச்சை
vitriol, அன்னபேதி
yard, பசும்புல்முளைத்திருக்குமுற்றம்
Greenish, *adj* பச்சையான
Greenly, *adv* பச்சையாய், புதிதாய்
Greens, *pl* கீரை
Greet, *v a* வாழ்த்துகிறது, மினவுதல்சொல்லுகிறது

Greeting, *s.* மினவுதல், வாழ்த்து
Gregarious, *adj* கூட்டமாய்ப்போகிற, மந்தையாய்ச்சாய்கிற
Gregariously, *adv* கூட்டங்கூட்டமாய்
Gregariousness, *s* இனம், கூட்டம்
Grenade, *s* எறிவெடிக்குண்டு, பம்புஸ்குண்டு
Grenadier, *s* போர்ச்சேவகன்
Grey, *adv* நரைத்த, வெண்மையான
Greyhound, *s* கொடிநாய், வேட்டைநாய்
Griddle, *s* பொரிக்கன்சட்டி
Gridiron, *s* சூட்டிறைச்சிதாங்கி
Grief, *s* துக்கம், வியாகுலம், கலக்கடி
Grievance, *s* மனக்குறை, மனத்தாங்கல்
Grieve, *v a* கலக்கடிப்படுத்துகிறது, துக்கப்படுத்துகிறது, சஞ்சலப்படுத்துகிறது
Grieve, *v n* துக்கங்கொண்டாடுகிறது, துயரப்படுகிறது
Grievous, *adj* துக்கமான, சஞ்சலமான, பாரமான
Grievousness, *s* துக்கம், சஞ்சலம்
Grievously, *adv* துக்கமாய், சஞ்சலமாய்
Griffin, *s* சிங்கமுஞ்கழுகுஞ்கூடியின்ற மிருகபட்சி, ஞாளி ஏமாந்தவன், பேதை
Grill, *v* பொரிக்கிறது
Grim, *adj* அவலட்சணமான, பயங்கரமான
Thou hast a grim appearance, உன்னிடத்திலேபிறருக்கு ஒருபயங்கரமிருக்கிறது
looks, பயப்படத்தக்கமுகம்
Grimace, *s* நெறிப்பு, நெறுநெறுப்பு, பரிகாசத்துக்கேதுவானநெறிப்பு
Grime, *s* கரி, மறு, கறை
Grimly, *adv* பயங்கரமாய், கசப்பாய், புளிப்பாய்
Grimness, *s* பயங்கரப்பார்வை, பயங்கரத்தன்மை
Grin, *v n* இளிக்கிறது, பல்லிளிக்கிறது
Grin, *s* இளிப்பு, நகைப்பு
Grind, *v a* அரைக்கிறது, உரைஞ்சுகிறது
an instrument, சாணைபிடிக்கிறது
curry stuffs, மசாலையரைக்கிறது, கறிக்குக்கூட்டரைக்கிறது
oil, செக்காடுகிறது
as teeth, பல்லால்மெல்லுகிறது, நறுமுறென்கிறது
at a hand-mill, திரிகையிலரைக்கிறது, ஏத்திரமரைக்கிறது
as polish gems, இரத்தினங்களிழைக்கிறது, சாணையிலேதீர்கிறது
Grinder, *s* அரைக்கிறவன்
Grinders, *pl* கடைவாய்ப்பல்
The teeth are in men of three kinds: Sharp, as the foreteeth; broad, as the back teeth which we call the grinders or molar-teeth; and pointed teeth or canine, which are between both, மனிதருக்கிருக்கும்பற்கள் மூவகையாம் கருக்காயிருக்கிறமுன்னம்பல்லும், அரைப்பானென்று சொல்லப்படும் கடைவாய்ப்பல்லும், இவையிரண்டுக்கும் நடுப்புறவிருக்குங் கூரியபற்களாகியநாய்ப்பல்லுமே
Grindstone, *s* சாணை, சாணைக்கல்
Grinner, *s* பல்லிளிக்கிறவன்
Grinning, *s* பல்லிளிப்பு, இளிப்பு, நகைப்பு
Grinningly, *adv* இளிப்பாய், இளிவாய்
Gripe, *s* பிடி, பற்று, பிடிப்பு
as grasp, கௌவல், கவ்வுதல்
gripes, உளவு, வயிற்றுளவு
Gripe, *v a* இறுகப்பிடிக்கிறது, துன்பஞ்செய்கிறது
Gripe, *v n* வயிறுளைகிறது
as pain, வலிக்கிறது, சுறுக்குச்சுறுக்கென்று கெல்லிவலிக்கிறது
Griping, *s* பிடிப்பு, வலிப்பு, வயிற்றுளைவு
Gripingly, *adv* வலிப்பாய்
Grisly, *adj* பயங்கரமான
Grist, *s* ஒருதரம்எந்திரத்திலரைத்தமாவு
Grist, to mill as profit or gain, ஆதாயம், இலாபம், சேர்மானம்
Gristle, *s* சவ்வு
of the ear, காதுமடல்
Gristly, *adv* சவ்வைப்போலொத்ததாய் சவ்வாய்
Grit, *s* சுணை, சுறசுறப்பு, பருக்கைக்கல், மணல்
of rice, நொய்
Grittiness, *s* சுணைத்தன்மை
Gritty, *adj* மண்ணுள்ள, சுணையுள்ள
Grizzle, *s* கருமையும்வெண்மையுங்கலந்தநரை
Grizzly, *adv* நரையாய்
Groan, *s* நெடுமூச்சு, பெருமூச்சு
Groan, *v n* பெருமூச்செறிகிறது புலம்புகிறது

Groaning, *s* புலம்பல்
Groat, *s* ஒருநாணயம்
Grocer, *s* பலசரக்குக்கடைக்காரன்
Grocery, *s* பலசரக்கு, பலசரக்குக்கடை
Grog, *s* நீர்கலந்தசாராயம்
Groin, *s* துடைக்குக்கீழ்ப்பக்கம்
Groom, *s* குதிரைக்காரன்
as a waiter, ஏவலாள்
as bridegroom, மாப்பிள்ளை, கலியாணமாப்பிள்ளை
Groove, *s* நெடும்பள்ளம்
Groove, *v a* பள்ளமாக்குகிறது, குழிகிறது நெடும்பள்ளமாக்குகிறது
Grope, *v* தட்டித்தடவியூர்ந்துகொண்டுபோகிறது, தடவித்தடவிப்போகிறது
with hands, தடவுகிறது
Groper, *s* தடவிச்செல்லுகிறவன்
Gross, *s* கணம், பருமன், தடிமன், தடிதது
in the gross, ஏகசகடாய், மொத்தமாய்
gross, adj பருத்த, தடித்த, மொத்தமான
gross matter, சடவஸ்து, மட்டிச்சரக்கு, தடிதத பதார்த்தம்
gross darkness, காரிருள்
gross lie, பச்சைப்பொய், சுத்தப்பொய், படாந்திரை
a gross, நூற்றுநாற்பத்துநாலு
Grossly, *adv* ஏகமாய், தொகையாய்
Grossness, *s* கனம், பருமை, கனப்பு, தடிப்பு, நாட்டிப்புறத்துக்குரியதன்மை
of body, கொழுப்பு, நிணம்
Grot, Grotto, *s* கெபி, குகை
Grotesque, *adj* கோணலுகிபான, சிரிக்கத்தக்க
Grotesquely, *adv* கோணங்கியாட்டமாய்
Ground, *s* நிலம், தரை, பூமி
1 *Dregs; lees; fæces,* வண்டல், அடிவண்டல்
2 *The first principles of knowledge,* மூலநியாயங்கள், மூலாதாரமானஅறிவு *After evening repasts, till bed time, their thoughts will be best taken up in the easy grounds of religion, and the story of scripture,* இராச்சாப்பாட்டுக்குப்பின்பு படுகைப்போகுமளவும் அவர்கள் தெய்வபத்திபின் மூலநியாயங்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருப்பார்கள்
as reason, நிமித்தம், நியாயம், காரணம், *on what ground do you object to this,* இதற்கு என்னநியாயத்தின்மேல் நீ ஆடசேபனைபண்ணுகிறாய்
level, நிலமட்டம், பூமிமட்டம், தரைமட்டம்.
to gain ground, இடங்கொண்டுகொள்ளுகிறது, இடம்பிடிங்குகிறது, அடிககோலிக்கொள்ளுகிறது
to lose ground, ஏமாந்துபோகிறது, பிந்திப்போகிறது, தயவிழந்துபோகிறது
Ground, *v a* அஸ்திபாரம்போடுகிறது, ஸ்தாபிக்கிறது
Groundless, *adj* அடியில்லாத, நியாயமற்ற.
Groundlessly, *adv* அடியில்லாமையாய்
Groundlessness, *s* நியாயமின்மை
Groundling, *s* ஒருமீன்
Groundrent, *s* நிலவரி
Groundwork, *s* அஸ்திபாரம், அடிப்படை, அடி.
Group, *s* திரண்டகும்பல், சிறுகும்பு, சிறுகூட்டம்
Group, *v.* மொய்க்கிறது, திரளுகிறது
Grove, *n* சோலை, தோப்பு.
Grovel, *v. n* தவழுகிறது, ஊருகிறது, புரளுகிறது
Grovelling, *adj* நாய்யான, ஈனமான, புரளுகிற
Grow, *v. n.* வளருகிறது, மூளைக்கிறது
1 *To improve; to make progress,* அதிகரிக்கிறது, பெருகுகிறது *grow in grace and in the knowledge of our Lord and Saviour,* நம்முடைய இரட்சகரைப்பற்றிய அறிவிலுங் கிருபையிலும அதிகரியுங்கள்
2 *To be changed from one state to another, to become either better or worse, to turn* மாறுகிறது, வேறுபடுகிறது *as, we may trade and be busy, and grow poor by it unless we regulate our expenses,* நாம் உலமுதத்துவியாபாரம்பண்ணலாம் அதினால் எளிமையுமாகலாம் செலவைச்செடுப்படுத்தாவிடடால்
up, கிளம்புகிறது
high, உயருகிறது, ஓங்குகிறது
lean, இளைத்துப்போகிறது
together, ஒன்றுசேருகிறது.

long, நீடிக்கிறது
full, நிரம்புகிறது
up to manhood, மனுஷீலுகிறது, ஆளாகிறது
well, செழிக்கிறது
thick or *close*, அடர்கிறது நெருங்குகிறது, சடைக்கிறது
old or *out of date*, நாட்செல்லுகிறது, நாட்படுகிறது

Grow, *v a* பயிர் செய்கிறது, வேளாண்மைசெய்கிறது
Grower, *s* வளருகிறவன், உழவன்
Growl, *v n* உறுமுகிறது
Growl, *s* உறுமல், முறுமுறெனல்
Growler, *s.* முறுமுறென்கிறவன், கடிநாய்
Grown, *pp* வளர்ந்த, நிமிர்ந்த
person, வளர்ந்தவன், பெரியவன்
Growth, *s* வளர்ச்சி, விருத்தி
Grub, *v a* கெல்லுகிறது, கிண்டுகிறது
Grub, *s* பனிப்புழு, புழு
Grubbing, *s* கொத்து, கெல்லுகை
Grudge, *s* வருமம், காய்மகாரம், உட்பகை, அடம்
Grudge, *v a* வருமஞ்சாதிக்கிறது
Grudger, *s* வருமஞ்சாதிக்கிறவன், அடநெஞ்சன
Grudging, *s* எரிச்சல், பகை
Grudging, *adj* வருமமுள்ள, வஞ்சமான
Grudgingly, *adv* எரிச்சலாய், மனப்புகைச்சலாய்
Gruel, *s* கஞ்சி, குழம்பு
Gruff, *adj* குறுகுறுப்பான
Grumble, *v n* உறுமுகிறது, முறுமுறென்கிறது
Grumbler, *s* முறுமுறுக்கிறவன்
Grumbling, *s* முறுமுறுப்பு.
Grumblingly, *adv* முறுமுறுப்பாய்
Grumous, *adj* உறைந்த, தடித்த
Grunt, *v. n* உறுமுகிறது
Grunting, *adj* உறுமுகிற
Grunter, *s* முறுமுறுக்கிறவன், பனறிபோற் குறுகுறுவென்போன்
Gruntingly, *adv* முறுமுறுப்பாய்
Guana, *s* உடும்பு
Guarantee, *s* உத்தரவாதி
Guaranty, *s* உத்தரவாதம், பிணை
Guard, *s* காவல
room, காவற்கூடம்
a strict guard, கட்டானகாவல்
in fencing, சிலம்பத்தில் தன் னேக்காக்கிறகாவல்
Guard, *v a* காக்கிறது, தற்காக்கிறது
strictly, கட்டுப்பண்ணுகிறது
Guarded, *pp* காக்கப்பட்ட, காவல்சூழ்ந்த
Guardedly, *adv* கவனிப்பாய்.
Guardedness, *s* எச்சரிக்கை, கவனிப்பு
Guardian, *s* காப்பாற்றுகிறவன், கண்காணி
natural guardians, உரிமைக்காரர், சொந்தக்காரர்
Guardian, *adj* காக்கிற, தற்காக்கிற.
Guardianship, *s* உரிமைக்கடன், ஆதரிக்குமுரிமை
right of, உரிமைத்தனம், சொந்தத்துவம்
Gubernative, *adj* ஆளுகிற
Gubernatorial, *adj* அரசாட்சிக்குரிய, ஆளுகைக்கடுத்த
Gudgeon, *s* ஒருமீன், பேதை, பேயன்.
Guess, *s* உத்தேசம், பாணிப்பு, நினேப்பிலே வந்தது
Guess, *v a* உத்தேசிக்கிறது, பாணித்துச்சொல்லுகிறது, நிதானிகிறது
Guesser, *s* திட்டம்பார்க்கிறவன், உத்தேசிக்கிறவன்
Guest, *s* விருந்தாடி, விருந்து
Guidance, *s* ஆதரவு, வழிகாட்டுந்துணை.
Guide, *s* நாயகன், வழிகாட்டி
spiritual, ஞானகுரு, சற்குரு
Guide, *v a* நடத்துகிறது, வழிகாட்டுகிறது
Guidepost, *s* வழிகாட்டுகிறதற்கு நட்டுவைத்திருக்கிறஸ்தம்பம்
Guile, *s* கள்ளம், சூது, வஞ்சகம்
Guileful, *adj* கபடமுள்ள
Guilefully, *adv* கபடமாய்
Guilefulness, *s* தந்திரம், கபடம்
Guileless, *adj* கபடற்ற
Guillotine, *s.* சிரச்சேதம்பண்ணுகிறதற்கானயந்திரம்
Guillotine, *v a* சிரச்சேதம்பண்ணுகிறது.
Guilt, *s* குற்றம், தோஷம், பாதகம்
Guiltily, *adv* குற்றமாய், தோஷமாய்
Guiltiness, *s* பாவமுள்ளதன்மை, குற்றம்

Guiltless, *adj* குற்றமற்ற, சுத்த
Guiltlessly, *adv* குற்றமற்றவிதமாய், குற்றமில்லாமல்
Guiltlessness, *s* சுத்தம், குற்றமில்லாமை
Guilty, *adj* குற்றமுள்ள, பாவமுள்ள
Guise, *s* வேஷம், கோலம்
Guitar, *s* யாழ், வீணை
Gulf, *s* குடாக்கடல், குடா
an abyss, பாதாளம்
as whirlpool, சுழி, நீர்ச்சுழி
Gull, *s* தந்திரம், எத்து, ஓர்கடல்பட்சி
Gull, *v a* எத்துகிறது, ஏய்க்கிறது
Gullet, *s* தொண்டை, குரல்வளை
Gully, *s* நீர்க்கால், சலதாரை
Gulp, *v n* ஆசையாய்விழுங்குகிறது
gulp *up*, ஏப்பமிடுகிறது
Gulph, *s as* gulf
Gum, *s* பிசின்
for sealing, முத்திரையிடுகிறபிசின் அரக்கு
lac, அரக்கு
of a tree, பிசின்
Gumarabic, *s* கருவேலம்பிசின்
Gumboil, *s* வாய்ப்புண் ஈறுமேலிருக்கும்பரு
Gumminess, *s* பிசுபிசுப்பு
Gummy, *a* பசையுள்ள, பிசினுள்ள, பிசுபிசுப்பான
Gun, *s* துபாக்கி, பீரங்கி
butt of, பிடிகு
Gunbarrel, *s* துபாக்கிக்குழல்
Gunboat, *s* பீரங்கியேற்றுகிறகப்பல்
Gunner, *s* பீரங்கிக்காரன்,
Gunnery *s* பீரங்கிவித்தை
Gunnycloth, *s* கோணி, கோணிச்சீலை, கச்சநதிச்சீலை
Gunpowder, *s* வெடிமருந்து, வாணமருந்து
Gunstock, *s* துபாக்கிக்கட்டை
Gunwale, *s* கப்பலின்விளிம்பு
Gurgle, *v* கழுக்குக்கழுகென்கிறது, குடுகுடென்கிறது
Gush, *s* பாய்ச்சல், பீரிடல்
Gush, *v n* பீரிடுகிறது, பீரிடுப்பாய்கிறது
out, சொரிகிறது, கொட்டுண்கிறது
Gust, *s* இதம், சுவை, உரிசை
of passion, மும்முரம், உக்கிரம்
of wind, புயல், கடுங்காற்று
Gusty, *adj* கடுங்காற்றுள்ள, பிசலான
Gut, *s* குடல், இரைக்குடல்
Gut, *v a* குடலெடுக்கிறது, சுவர்மாத்திரம்விட்டுக்கட்டுக்கோப்பைவாங்கிப்போடுகிறது
Guttascrena, *s* கண்ணிலேபூவிழுகிறவியாதி கண்ணுக்குரியவியாதி
Gutter, *s* கான்மதகு, நீர்க்கால்
as groove, பள்ளம், குழி
Guttural, *adj* கண்டத்திலெழும்புகின்ற ஒலியினுலாகுமெழுத்துகள்
voice, கீழ்க்குரல், கண்டத்திலெழும்புகிற ஒலி
Gutturally *adv* தொண்டையினுல, தொணடை வழியாய்
Guzzle, *v a* மிச்சமாய்க்குடிக்கிறது, அதிபானம்பண்ணுகிறது
Guzzler *s.* கள்ளுக்குடியன்
Gymnasium, *s* மல்லக்கசாலை, வேடிக்கைசாலை ஓர்விதச்சாஸ்திரப்பள்ளிக்கூடம்
Gymnastic, *adj* மல்லயுத்தமான
Gymnastics, *s* மல்லயுத்தநூல்
Gynarchy *s* பெண்ணரசாட்சி
Gypsey, *s* மறவன், கள்ளன், குறவன்.
Gypsum *s* ஓர்கல்
Gyral, *adj* சுழலுகிற, வட்டமிடுகிற
Gyration, *s* சுழலுகை, வட்டமிடுதல்
Gyromancy, *s* மந்திரதந்திரசம்பந்தம், மந்திரச்சக்கரம்
Gyve, *s* விலங்கு, தொழு

H

Habeas-corpus, *s* ஏபியாஸ்கார்ப்பஸ், என்றுசொல்லப்படும்பெரியகோர்ட்டு விடுதலைப்பத்திரம், எந்தநிமித்தத்தினுலாவதுபிடிபட்டுச்சிறையிலிருக்கிறவன் இராசநீதிஸ்தலத்தின் நியாயத்தினுலே தன்சொந்தச்செலவைக்கொண்டு விடுதலையாகி நியாயம்பேசிக்கொள்ளுகிறதற்குக் கொடுகிற அதிகாரபத்திரம்
Haberdasher *s* அங்காடிவிற்போன், அங்காடிக்கூடைக்காரன்
Habergeon, *s* கழுத்திலும்மார்பிலுங்கட்டிக்கொள்ளுஞ்சீரா, கழுத்துக்கட்டு, மார்ப்போர்வை. கழுத்துக்கும்மார்புக்குமாய்க்கடுகிறசீரா

Habiliment, *s* உடுப்பு, உடுதாவணை, உடைகோலம்

Habit, *s* சுபாவம், பழக்கம், உடுப்பு உடுபாவணை, அப்பியாசம், கைப்பழக்கம், சக்தி, அப்பியாசங்கூசாவித்தையாயிருக்குந்தன்மை

as custom, inveterate use நெடுநாட்பழக்கம், அலவாட்டு

Habit, *v a* உடுத்திக்கொள்ளுகிறது, அணிகிறது, அலங்கரித்துக்கொள்ளுகிறது

Habitable, *adj* வசதியான, இடவசதியுள்ள, குடியிருக்கத்தக்க,

Habitance, *s* குடியிருப்பு, வாசஞ்செய்கை, இல்லிடம், தங்குமிடம்

Habitation, *s* வாசஸ்தலம், வாழ்க்கையிடம், இருப்பிடம், குடியிருப்பு,

Habitual, *adj* வழக்கமான, பழக்கமுள்ள, அலவாட்டான, நெடுநாளப்பியாசத்திலுல் செனமக்குணமான

accuracy, குறிதப்பாததிதானம்

conduct, வழக்கமானநடத்தை

Habitually, *adv* வழக்கமாய், சாதாரணமாய், வாடிக்கையாய்

Habituate, *v a* வழக்கப்படுத்துகிறது, அநுவழக்கமாய்க்கையாடுகிறது, பயிற்சிசெய்கிறது

one's self அப்பியாசித்தல், பழக்கம்பண்ணுதல்

Habituate, *adj* பழக்கப்பட்ட, பழகிய, அப்பியாசப்பட்ட

Habituated, *to be*, படிதல், கைபடிதல், குணம்படிதல், எறுதல், சாதனையாகுதல்

Habitude, *s* சாதாரணவழக்கம், ஒன்றைச்செய்துசெய்துகொண்டதிறமை, ஊடாட்டம், கூடியிருந்தபழக்கம்

Hack, *s* கொத்து, வெட்டு, கூலிக்குதிரை

Hack, *v a* கொத்துகிறது, துண்டாடுகிறது, கொதறிக்கொளறிவிடுகிறது, சல்லிசல்லியாய்க்கொதறுகிறது, தங்கித்தங்கிப்பேசுகிறது

Hackle *s* பச்சைப்படடி, நூற்காதிருக்குஞ்சிக்குப்பஞ்சு, இழைக்காதது

Hackle, *v a* சிக்குவாங்குகிறது, கிழித்தெடுக்கிறது

Hackney, *s* நடைகுதிரை, மட்டக்குதிரை, கூலிக்குதிரை, கூலியாள், குடிக்கூலிவீடுமுதலியன

Hackney, *v a* பழகுகிறது, கையாடுகிறது, பழக்கப்படுகிறது

Hackneyed, *pp* பழசாய்ப்போன, அடிபட்ட

Haft *s* பிடி, காம்பு, கைபிடி

Hag, *s* சூனியக்காரி, அவலடசணமானகிழவி

Hagard, *adj* காட்டுத்தனமான, சாதுவில்லாத, மூண்டான, கழுக்காணித்தனமுள்ள

Haggardly, *adv* அந்தக்கேடாய், விரூபமாய் அவலட்சணரூபமுள்ளதாய்

Haggle, *v n* கசிறுகிறது, கொசிறுகிறது

Hagiographer, *s A holy writer*, ஆகமமெழுதினவன், திருவாசகங்களெழுதியவன், திருநூலாசிரியர்கள

The Jews divide the holy Scriptures of the Old Testament into the Law, the Prophets, and the Hagiographers, யூதர்கள பழையேற்பாடடுப்பரிசுத்தஅடசரங்களேவதமென்றும் தீர்க்கதரிசனமென்றுந் திருநூலாகிரியர்களெழுதிய திருவாசகங்களென்றும் பாகுபாடுசெய்திருகிறார்கள்

Hail, *s* ஆலாங்கட்டி, பனிநீர்க்கடடி, ஆலங்காயரசங்காய்

as salutation வாழி, வாழ்த்து, சோபனம், மங்களம்

Hail *v n* ஆலங்காயரசங்காய்மழைபெய்கிறது

Hail, *v a* கூப்பிடுகிறது, அழைக்கிறது

Hail, *interj* நன்றுக, வாழ்க, நன்றுயிரு, சுகமாயிரு, என்னுங்கருத்தில்வழங்கும்வாழ்த்துகுறி

Hailstone, *s* ஆலாங்கட்டி

Hair, *s* மயிர், உரோமம்

frizzled சுருண்டமயிர், சுருட்டைமயிர்

hair of the eyebrow, நெற்றிப்புருவம், புருவத்திண்மயிர்

knot of a man, குடுமி, குடுமிமயிர்

brush, மயிர்ச்சீவி, மயிர்ச்சிப்பு, மயிர்ச்சுச்சு

cloth, கம்பளம், கம்பளி

red செம்படைமயிர், செம்மயிர்

Hairiness, *n s* மயிருள்ளதன்மை, மயிர்நிறைவு, உரோமமுள்ள

Hairless, *adj* மயிரில்லாத, மொட்டையான மொழுக்கலான

Hairpowder, மயிர்ச்சாத்து

Hairy, *adj* மயிருள்ள, மொசமொசத்த.

man, உரோமஸ்தன்

Halberd, *s* வேல், ஒருஆய்தம், ஈட்டி, சண்டைக்கருவியிலொன்று

Halberdier, *s* ஈட்டிக்காரன், ஆயுதம்பிடித்தவன்
Halcyon, *s* மீன்குத்தி
Halcyon, *adj* அமைச்சலான, அமர்ந்த, தெளிந்த
Hale, *adj* சுகமுள்ள, சொஸ்தமான, உற்சாகமுள்ள, மலர்ச்சியுள்ள
Half, *s* அரை, பாதி, சரிபாதி,
boiled, அரைவேக்காடு, வெந்ததுபாதி வேவாததுபாதி
dead, குற்றுயிரான
Half-blood, *s* இருசாதி, இருவிந்து, கலப்பிடரத்தம், ஒருதாய்க்குமொருதந்தைக்கும் பிறவாதவன்
Half-blooded, *adj* சங்கரசாதியான, பலபேருக்குப்பிறந்த
Half-moon, *s* அர்த்தசந்திரன், பாதிமதி, வளர்பிறையிலாகிலும்தேய்பிறையிலாகிலும், பாதியாயிருக்கிற நிலவு
Half-penny, *s* அரைக்காசு, ஒருவகைநாணயம்
Half-pay, *n s* அரைச்சம்பளம், பாதிச்சம்பளம்
Half-read, *adj* அரைப்படிப்புள்ள, நாடோடிப்படிப்புள்ள, கிற்றறிவுள்ள
Half-scholar, *s* அரைப்படிப்பாளி, கல்வியில் நிறைவிலலாதவன்
Half-way, *adj* இடையிலே, இடைவழியிலே, நடுவழியான, அரைவாசிதூரமட்டும்
Hall, *s* சாலை, மண்டபம், நியாயஸ்தலம், நீதிஸ்தலம், கூடம்
Hallelujah, *s* தோத்திரப்பாடடு, போற்றி, துதிகவி, கடவுள்வாழ்த்து துதியுங்கள்கடவுளையென்பது இதின்பதச்சேதார்த்தம்
Halliard, *s* சாம்புங்கயிறு, தூகுங்கயிறு
Halloo, *interj* கூவுதல், கூப்பிடல், கூவியழைத்தல், சத்தங்காட்டியழைத்தல்
Halloo, *interj* கூவியழைக்குங்குரல், ஓய்ஓய்என்றல், கூவெனல்
Hallow *v a* பரிசுத்தமாக்குகிறது, ஆசரிக்கிறது, அருச்சிக்கிறது
Hallucination, *s* பிழை, தப்பிதம், தவறு, மூடத்தனஞ்செய்தல்.
Halo, *s* ஊர்கோள், பரிவேடம், சூரியனேச்சந்திரனேச்சுற்றிவிளிம்புகொண்டசுற்றுவட்டம்
Halser, *s* ஓர்கயிறு
Halt, *s* நொண்டல், தடுக்கப்படல், முடம்
Halt, *v n* நொண்டுகிறது, தடுக்கிநடக்கிறது, இருமனப்பட்டுநடக்கிறது நிற்கிறது
Halter, *s* கொலைகாரனைத்தூக்குங்கயிறு
of a horse, குதிரைவாய்க்கயிறு
Halter, *v a* கயிற்றுறுக்கட்டுகிறது, சுருக்குமாட்டுகிறது.
Halting, *s* தரிப்பு, தங்கல், முடம்
Haltingly, முடமாய், தெளிவாய், முடங்கலாய்
Halve, *v a* பங்காக்குகிறது, பாதியாக்குகிறது, சரிபங்குசெய்கிறது, சரிபாதியாக்குகிறது, இருபாதிபண்ணுகிறது
Ham, *s* உப்பிட்டபன்றித்தொடை, பின்னந்தொடை.
Hamlet, குறிச்சி, பேட்டை, பாக்கம்
Hammer *s* சுத்தி, சுத்தியல், கட்டைப்பாளை
as sledge, சம்மட்டி
Hammer, *v a* சம்மட்டியடியடிக்கிறது, ஓங்கியடிக்கிறது, தூகியறைகிறது
as brazier, &c தட்டுகிறது
Hammock, *s.* தொங்குதொட்டில், ஏணை, தூங்குமஞ்சம்
Hamper, *s* கூடை, கடகம்,
Hamper, *v a* சிக்காக்குகிறது, சன்னல்பின்னலாக்குகிறது, முடைகிறது, பின்னுகிறது
Hamstring, *s* பினகால்நரம்பு, பின்னதொடையின்விசைநரம்பு.
Hamstring, *v a* பின்கால்நரம்பையறுக்கிறது
Hand, *s* கை, கரம்,
as signature or hand-writing, கையொப்பம், கையெழுத்து
to be at hand, ஆசீராயிருக்கிறது, கிட்டேயிருக்கிறது, உண்டாயிருக்கிறது
in hand, கையிருப்பாய், கைவசமாய், உடைமையாய்
on hand, சொந்தமாய், கைவசத்திலே
off hand, உடனே, எடுத்தாற்போலே
heart and hand, மனமும்வாக்கும், உள்ளமும்நடையுமொத்து
heavy hand, கடுங்கை, உரத்த or வலுத்தகை, ஈயாக்கை
light hand, மென்கை, ஈவுள்ளகை
to wash hands *of a crime*, கையைக்கழுவுதல், தலையைமுழுவுதல்

from hand *to mouth,* அன்றுடகங்காய்ச்சிக்குடிக்கிற, குறைச்சலானபிழைப்புள்ள அன்றுகுத்தி, அன்றுலையிலிடுகிற.

having a hand *in* உடந்தை, உட்கை, உள்ளுடந்தை, உள்ளுக்குள்

All hands *agree* எல்லாருமொத்துக்கொடுக்கிறார்கள், எல்லாருமொப்புகிறார்கள்

on all hands, எலலார்பட்சத்திலும்

settled hand, படிந்ததகை, தீர்ந்ததகை,

hand *over head* முன்பினபாராமல், ஒன்றும் நினையாமல, அசட்டையாய்

hand *in hand,* நேர்நேராய், இந்தக்கைக்குஅந்தக்கைபார்வையாய், கைகொத்தாய், சகிதமாய், ஒன்றுகூடினதாய்

1 *rate, price,* விலை, வீதம் இதற்கு இவ்வள வுஎனபதுபோல

2 *labour, act of the hand,* தொழில், பாடு, உழைப்பு

3 *power of performance,* செய்திறம், திறமை, கைத்திறம், *as a friend of mine has a very fine hand on the violin,* என்சிநேகிதரொருவன்வீணைவாசிக்கிறதிலேதிறமைசாலி

4 *attempt, undertaking,* கை, ஒருகைபார்ப்போமென்பதுபோல, முயற்சி, பிரயத்தனம்.

5 *agency, part in action,* கையிடுதல், தலையிடல், கூட்டுவேலை.

6 *care; necessity of managing,* அதிகாரம், வசம், *as, Jupiter had a farm long time upon his hands* பூப்பித்தர் (கையில்) கையாட்சியில்நெடுநாள்ஒருநிலமிருந்தது

7 *reach, nearness, as at hand,* கைகெடினஅளவு, கையெட்டும்தூரம், சமீபம், அருகே, கிட்டே

8 *scheme of action,* வழிவகை, உபாயம், எதனம், *as, consult your own ways, and think which* hand *is best to take,* உன்காரியங்களை நீ யோசித்து எவ்வழியாய்த்துவகிச்செய்யலாமென்றுபார்.

9 *transmission; conveyance; agency of conveyance,* கொண்டுநடத்துதல், அனுப்புதல், என் கையாய்ச்செய்தேனென்பதுபோல, *as, the salutation by the hand of me Paul,* பவுலாகியநான்என்கையெழுத்தாய்மினவுதலெழுதினேன்

10 *possession; power,* அதிக்கம், அடக்கம், என்கையில் (கம்பையில்)இருக்கிறதென்பதுபோல *as, though you war you are in my hand,* நீங்களென்னபோரிட்டாலும் என்கைகடகந்தானே

11. *agent, person employed, as,* ஆள், கையாள், கைக்குதவி, *best hands were engaged in the work,* அந்தவேலைக்குக்கைக்குதவியான நல்லஆள்கள் வைக்கப்பட்டார்கள்.

12 *catch or reach without choice,* நேர்ப்பட்டது, கைக்ககப்பட்டது, கண்டது (அகபபட்டது அருக்காணியென்பதுபோல)

13 *form or cast of writing,* போங்கு, மாதிரி ஒருதன் கையெழுத்தென்பதுபோல. *If my debtors deny their hands and then refuse to pay,* என்கடன்காரர் தங்கள்கையெழுத்தல்லவென்று சொல்லிக் கடனைக் கொடுக்காமற்போனால்

Hand, *v a* நடப்பிகிறது, கைகொடுகிறது, நடத்துகிறது, கைகொடுத்துநடத்துகிறது, பிடிகிறது

hand *down,* அனுப்புதல, செலுத்துதல.

to one, கொடுத்தல, தருதல, கைநீட்டல்.

a person, கைகொடுத்துதவுதல

up, ஏறதுதல, தாங்குதல

Handbarrow, } *s,* கைவண்டி
Handcarriage, }

Handcuff, *s* கைவிலங்கு

Handcuff, *v a* கைவிலங்குமாட்டுகிறது

to be handcuffed, பூண்டுகொள்ளல், மாட்டிக்கொள்ளல்

Handful, *s* கைப்பிடி, கைகொண்டஅளவு, கைநிறையளவு

Handicraft, *s* கைத்தொழில, கைவேலை, வேலையாள், கூலியாள், கையாலுழைத்துப்பிழைப்பவன்.

Handily, *adv* சமர்த்தாய், கைச்சாதுரியமாய்,

Handiness, *s* லகுச்சமர்த்து, கைச்சாதுரியம், கைப்பழக்கம்

Handiwork, *s* கைத்தொழில, கைவேலை, உழைப்பு, வேலைப்பாடு

Handkerchief, *s* குட்டை, உறுமாலை, இலேஞ்சி, சவுக்கம்

Handle, *s* பிடி, காம்பு, கைபிடி, ஏது, வழிவகை

Handle, *v a* கையாடுகிறது, கையாளுகிறது, தடவுகிறது, தொடுகிறது, வழங்குகிறது

as manage, நடத்துதல, கையாளுதல,பராமரித்தல
as discuss, விவரித்துப்பேசுதல, விரிதுரைக்கூறுதல, விரிவாய்ச்சொலலுதல
Handling, *s* ஊடாட்டம், நட்பு.
Handmaid, Handmaiden, } *s* வேலைகாரி, பணிவிடைகாரி.
Handmill, *s* ஏந்திரம், திரிகை.
Handsaw, *s* கைவாள், சிறுவாள்
Handsome, *adj* அழகான, இலட்சணமான, நேர்வடிவுள்ள
wages, நலலசம்பளம்
person, அழகன, அழகி
property, மிகுந்தஆஸ்தி, நல்லஆஸ்தி
Handsomely, *adv* அழகாய், அநதமாய், நேர்த்தியாய், மிகுதியாய்
Handsomeness, *s* அழகு, அந்தம், இலட்சணம், சௌந்தரியம்
Handspike, *s* கைமிண்டி
Handwork, *s.* கைபபாடு, கைவேலை
Handwriting, *s* கையெழுத்து, எழுதது, ஒவ்வொருவருக்குப்படிந்தமாதிரிகையெழுதது
Handy, *adj* கையாற்செய்யும்படியான, கைச்சமர்தான, கைவாட்டான.
Hang, *v a* தூக்குகிறது, நான்றுகொள்ளுகிறது, கடடித்தூககுகிறது
hang up, மாட்டிவைத்தல, தூக்கிவைததல,
down the head, தலைகவிழ்தல, தலையைக்கீழேபோடுதல்.
one's self, நான்றுகொள்ளல
up a curtain, திரைகட்டுதல
low, தாழ்ததுதல, பணிததல
Hang, *v n* தொங்குகிறது, சாய்கிறது, தாழுகிறது
as the head, தலைகுனிதல, தலைசாய்தல்
Hanger, *s.* தூக்கு, உறி, தூக்குக்கயிறு
as a sword, ஓர்விதவாள்
Hanger on *s* திண்ணைதூங்கி, பிறர்மேற்பாரமாயிருப்போன்,தினமுமொருவர்வீட்டிலேதின்றுதிரிகிறவன்
Hanging, *s* தொங்கல், தூக்கு, தூக்கிவைத்திருப்பது
lamp, தொங்குவிளக்கு
as drapery, தோரணம், தூக்கணம்
as death by the halter, தூக்கிறுற்சாவுஞ்சாவு
Hangman, *n s* தூக்குகிறவன், கொலபாதகனைத்தூக்குகிறவன்
as a term of reproach, தூக்குணி,வெட்டுணி, பாதகன்
Hank, *s* நூற்கழி, நூற்பாகு
Hanker, *v n* ஆசைப்படுகிறது, பறிதித்தனமாய்ப்பறக்கிறது, அவாக்கொண்டுதிரிகிறது
Hankering, *s* ஆவல், ஆசை, தாபம், பறிதித்தனமான அவா
Hap, *s* தற்செயல், தாறுய்ச்சம்பவிப்பது, மோசம், அபாயம்
Haphazard, *s* நிர்நிமித்தியம், தற்செயலான சம்பவம்
Hapless, *adj* அதிஷ்டங்கெட்ட, யோகமில்லாத
Haply, *adv* தற்செயலாய், தாறுய்வந்த.
Happen, *v n* சம்பவிகிறது,ஆகிறது,உண்டாகிறது, நேரிடுகிறது,தோன்றுகிறது,வந்துசேர்கிறது, *to fall by chance,* தற்செயலாய்வருகிறது, தேவாதீனமாய்நடக்கிறது
Happily, *adv* அதிஷ்டமாய், அதிஷ்டவசமாய்.
Happiness, *s* பாக்கியம், சுகம், இன்பம், நல்லனுபவம், அதிஷ்டம்.
and unhappiness, இன்பதுன்பம், சுகதுக்கம், நன்மையுந்தீமையும், வாழ்வுந்தாழ்வும்
great, பேரின்பம், மகாபாக்கியம்
Happy, *adj* பாக்கியமான, மனரம்மியமுள்ள, உலலாசமான, சந்தோஷமான
event, அதிஷ்டநேர்பாடு, நல்லசெய்தி, நலலகாரியம
countenance, மலர்ந்தமுகம்
to be happy, மனங்களிதத்தல், சந்தோஷித்திருத்தல், ஆனந்தங்கொண்டிருத்தல
Harangue, *s* பேச்சு, பிரசங்கம்
Harangue, *v a* பிரசங்கிகிறது,சாதுரியமாய்ப்பேசுகிறது, சபைமுகத்தில்பேசுகிறது.
Haranguer, *s* சபைமுகத்திற்பேசுவோன், பிரசங்கி
Harass, *v a* ஆட்டியலக்கழிகிறது, தொந்தரைபண்ணுகிறது, அலட்டுகிறது, இழுத்துப்பறித்திழுவுகாணுகிறது
Harassing, *pr.* அலக்கழிக்கிற,தொந்தரைசெகிற.
Harbinger, *s* முன்தூதன், கட்டியகாரன், முன்னோடுகிறவன்.

Harbor, *s* விடுதி, துறை, குடா, ஒதுக்குக்கடல், அடைக்கலம்

Harbor, *v n* விடுதிவிடுகிறது, துறையிலிறங்குகிறது

Harbor, *v a* உபசரிக்கிறது, இடங்கொடுக்கிறது, விடுதிகொடுக்கிறது, அடைக்கலங்கொடுக்கிறது

Harborage, *s* கப்பல்கள் நங்கூரம்போடுகிற இடம்

Harborer, *s* அநுசாரி, சகாயி, விடுதிவிடுவோன்

Harborless, *adj* அடைக்கலமற்ற, ஒதுக்கற்ற

Hard, *adj* உரத்த, வலுத்த, அழுத்தமான, தடித்த, கெட்டியான

as firm, not soft, வயிரமான, கல்லான, வன்னிமரம்போன்ற,

as difficult, வருத்தமான, பாடான, புத்திக்கரிதான.

as difficult of accomplishment, full of difficulties, உழைப்பான, மல்லான, மல்லுப்படும்படியான, மல்லுக்கட்டான்

breathing, மூச்சுப்பிடிப்பான, நெடுமூச்செறிகிற.

soil, காய்ந்துகரடாய்க்கிடக்கிறநிலம்.

treatment, நெருக்கம், நெருக்கிடை

contest, கடுத்தருக்கம், கொடியவிவாதம்

letters, வலலெழுத்து, வலலினம், வன்கணம்

as not plentiful, நலலகாலமலலாத, அதிஷ்டவீனமான, சங்கடமான

Hard, *adv* அருகே, கிட்ட, சமீபமான, பிரயாசமாய், உழைப்பாய், விடாமுயற்சியாய்

hardly, கிட்டமுட்ட, அணுக, கழுத்தைப்பிடிக்க

to drink hard, வெறிகொள்ளகுடிக்கிறது

Harden, *v a* உரமாக்குகிறது, வைரமாக்குகிறது, இறுகப்பண்ணுகிறது, கெடிப்படுத்துகிறது, கடினமாக்குகிறது.

plaster by rubbing, அழுத்தியழுத்தித்தேய்த்துகெடியாக்குதல

Harden, *v n* உரக்கிறது, தடிக்கிறது, இறுகுகிறது, வயிரிக்கிறது,

Hardhearted, *adj* கன்னெஞ்சான.

person, வன்னெஞ்சன், கன்னெஞ்சன், கொடியவன்

Hardheartedness, *s* கடுமை, கொடுமை, கன்னெஞ்சு, வன்னெஞ்சு

Hardihood, *s* அஞ்சாமை, உரத்தநெஞ்சு, நெஞ்சுரப்பு

Hardily, *adv* தைரியமாய், வீரமாய்

Hardiness, வீரம், திடம், பலம், உரம்

Hardly, வருத்தமாய், கெட்டியாய், உழைப்பாய், பிரயாசமாய்

Hardmouthed, *adj.* கடிவாளத்துக்கடங்காத, அமையாத, அடங்காத, மூண்டான

Hardness, *s* இறுகுகம், வைரம், உலோபித்தனம், பிசுனத்தனம்

hardness of heart, நெஞ்சுரப்பு, மனகடினம்

Hardship, *s* கஷ்டம், கற்கசம், or கக்கிஷம், பாடு, வருத்தம், தொலலை, கஸ்தி

Hardware, *s* இரும்புமுதலியவற்றுற்சமைத்த பாண்டங்கள், பாத்திரங்கள், கருவிகள்

Hardy, *adj.* வீரமான, துணிவுள்ள, பலத்த, மூண்டிய

Hare, *s* முயல், மூசல்

Harebrained, *adj* நிலையற்ற, அலைவுள்ள

Harelip, *s* மூககறை

Harem, *s* அந்தர்ப்புரம், இராசஸ்திரிகளிருக்குமிடம், இராணிமால்

Hark, *v n.* செவிகொடுக்கிறது or கேள்விகொடுக்கிறது.

Harlequin, *s* கோணங்கி, கோமாளி

Harlot, *s* வேசை, வேசி, விபசாரி

in scripture, விகிரகாராதனைக்காரர், கருத்தைவிடுத்திரிவோர்

Harm, *adj* தீங்கு, தீமை, கெடுதி, கேடு, இடையூறு.

Harm, *v a* தீங்குசெய்கிறது, கெடுக்கிறது, சேதப்படுத்துகிறது, நஷ்டப்படுத்துகிறது, அழிம்புசெய்கிறது.

Harmful, *adj* தீங்குள்ள, தீங்கான, தப்பிதமான

Harmfully, *adv* தீமையாய், தீங்காய், நஷ்டமாய், நாசமாய், மோசமாய்

Harmless, *adj.* குற்றமற்ற, கபடிலலாத, மோசமில்லாத

person, எளியவன், ஏழை, அப்பிராணி, அப்பாவி.

Harmlessly, *adv* நோகாமல, நஷ்டமின்றி, மோசமின்றி, தீங்கிலலாமல்.

Harmonic, *adj.* சங்கீதத்துக்குரிய, இசைகூடத்த, இன்னிசையான.

Harmonious, *adj.* இன்னிசையான, பாடுகுரிய, இசைவான, கோவையான, ஒத்துவருகிற

speech, இசைந்தவசனம், தீஞ்சொல், மதுரவசனம்

Harmoniously, *adv* ஒத்தபடி, ஏற்க, இசைவாய்

Harmoniousness, Harmony, *s* இசை, இசைவு, இணக்கப், உடம்பாடு, ஒருமனப்பாடு, ஒருமை, சேர்ச்சி, இசைப்பாட்டு, இன்னிசை

in music, இன்னிசை

to live in harmony, ஒத்திருத்தல், கூடிவாழ்தல், இசைந்துவாழ்தல்

Harmonize, *v a* இசையப்பண்ணுகிறது, சரிப்படுத்துகிறது, சம்பந்தப்படுத்துகிறது, சமன்படுத்துகிறது

Harmonize, *v n* சேர்படுகிறது, இசைகிறது, பொருந்துகிறது, இணங்குகிறது

Harness, குதிரையுடுப்பு, போருக்கடுத்த ஆயுதங்களின்பொதுப்பெயர்

of a weaver's loom, விழுது

Harness, *v a* பூட்டுகிறது, அணிகிறது, சரிக்கிறது, உடுத்துகிறது, பண்ணமைக்கிறது, பண்ணுறுத்துகிறது குதிரைபூட்டுகிறது

Harnesser, *s* உடுத்துவோன், குதிரைபூட்டுவோன்

Harp, *s* வீணை, யாழ், ஓர்நட்சத்திரம்

Harp, *v n* வீணைவாசிக்கிறது, யாழ்வாசிக்கிறது

as to dwell on a subject, எடுத்தெடுத்துப்பேசுதல், மெத்தவும்பேசுதல்

Harper, *s* வீணைவாசிக்கிறவன்

Harping, *s* வீணைவாசிப்பு, ஒன்றைக்குறித்துமிகவும்பேசும்பேச்சு

Harpoon, *s* மண்டா, எறியீட்டி

Harpoon, *v a* மண்டாவிலூற்குத்துகிறது, ஈடியாலெறிகிறது

Harpooner, *s* ஈட்டிக்காரன்

Harpsichord, *s* சுரமண்டலம்

Harpy, *s* காளி, பசாரி

Harridan, *s* கிழவி கெட்டழிந்தவேசி

Harrier, *s* மோப்பம்பிடித்தறியுநாய்

Harrow, *s* பரம்பு, பரமபடிக்கும்பலகை பரம்படிக்குங்கருவி

Harrow, *v a* பரம்படிகிறது, கலக்கப்படுத்துகிறது, வேதனைப்படுத்துகிறது, மனதைவாதிக்கிறது

Harry, *v a* அலக்கழிகிறது, கொள்ளையாடுகிறது

Harsh, *adj* உவர்ப்பான, காரமான, உறைப்புள்ள, உரப்புள்ள, கடினமான, சருக்கையான.

to the taste, காரப்பு, உறைப்பு

expression, language, வெடுவெடுப்பானபேச்சு, கொடுஞ்சொல், கொச்சைப்பேச்சு

voice or sound, உரத்தசத்தம், வெடித்தகுரல்

To taste harsh, உவர்த்தல், கசத்தல் உறைத்தல், கார்த்தல், கரித்தல்

Harshly, *adv* உரப்பாய், வெடுவெடுப்பாய், குறும்பாய், தஷிடத்தனமாய்

Harshness, *s* உக்கிரம், உரைப்பு, வெடுவெடுப்பு குறும்பு

severity, கடினம், கடுமை, நிஷ்டூரம்.

Harslet, Haslet, *s* பன்றியீரல்

Hart, *s* மான, ஆண்மான

Harts'horn, *s* கலக்கொம்பு, மான்கொம்பு

Haruspice, *s* குறிகாரன், நிமித்தஞ்சொல்லி

Harvest, *s* விளைவுகாலம், அறுப்புக்காலம், விளைவு, மேவளாண்மை, பலன்

Harvest, *v a* அறுக்கிறது, அறுப்பறுகிறது, விளைவுசேர்க்கிறது

Harvesthome, *s* அறுப்பறுத்தபின் பாடும்பாட்டு, அறுப்பறுத்தபின்செய்யுஞ்விருந்து

Harvestmoon, *s* வேனிற்காலத்துச்சந்திரன்

Hash, *s* கொத்தினகறி, அரிந்தஇறைச்சி

Hash *v a* அரிகிறது, கொத்துகிறது, நையக்கொத்துகிறது

Hasp, *s* பூட்டு, கொளுவி,

Hasp, *v a* பூட்டுகிறது, கொளுவுகிறது, மாட்டுகிறது

Hassoc, *s* மெத்தைப்பாய், தடித்தபாய், உரப்புப்பாய்

Haste, *s* சீக்கிரம், சுறுக்கு, துரிதம், விரைவு, தீவிரம்,

Haste, Hasten, *v n* சீக்கிரப்படுகிறது, அவசரப்படுகிறது விரைகிறது, தீவிரிக்கிறது, சுறுகெனப்பேகிறது

Haste, Hasten *v a* துரிதப்படுத்துகிறது, அவசரப்படுத்துகிறது

Hastener, *s* சுறுக்குப்பண்ணுவோன, தீவிரிப்போன், சுறுக்கன்,

Hastily, *adv* கடுக, சுறுக்காய், சலுதியாய, விரைவாய்

Hastiness, *s* அவசரம், சீக்கிரம், சுறுக்கு சலுதி

of a stream, &c. நீர்முகம், நீரூறறு
as intellect, மனம், புததி, அறிவு.
of the bed, தலைமாடு
as chief, தலைவன், முகாமைக்காரன்
Headache, *s* தலைவலி, தலைநோய், மணடைக்குதது
Headdress, *s* தலையிலணிவது, தலைச்சீலை
Heading, *s* தலைப்பகுதி, மூலம்
of a book, முகவுரை, பதிகம், பொருள், அதிகாரமுதலியவறறின்பின்டப்பொருள்
Headland, *s* முனை, கோடி
Headlong, *adj* தலைகீழாய், அதோகதியாய், செங்குத்தாய், புத்தியில்லாமல்
to fall headlong, செங்குத்தாய் விழுதல் தலைகீழாய்விழுதல்,
Headman, *s* தலைவன், முதலாளி, முகாமைக்காரன், பெரியதனக்காரன்
Headpiece, *s.* தலைச்சோடு, தலைச்சீரா, புததி, அறிவு
Headquarters, *s (plu)* சமஸ்தானம், கெடிஸ்தலம்
Headship, *s.* தலைமை, நாயகம், முதன்மை, ஆதிகம்
Headstall, *s* கடிவாளததிறனர்பகுதி, குதிரையின்தலையைமுடிகிறவார்
Headstone, *s* தலைக்கல், கோடிக்கல்.
Headstrong, *adj* முன்பின்பாராத, மூணடான, மூடததனமுள்ள, தனபோககுள்ள
Headwind, *s* எதிர்காறறு, மாறுகாறறு
Headworkman, *s* கண்காணிப்புகாரன், மேஸ்திரி
Heady, *a* முட்டாள்த்தன்மையுள்ள, தன்மூப்பான, பேர்நதபோக்குள்ள, நினைத்தபடிசெய்கிற, போடுபோக்கான
Heal, *v a* சுகப்படுத்துகிறது, சொஸ்தப்படுதது கிறது
Heal, *v. n* குணப்படுகிறது, குணமாகிறது, சுகப்படுகிறது, தேறுகிறது.
as sores, காய்தல், ஆறுதல், உதிர்தல்
Healer, *s* சுகப்படுதது கிறவன், வைதது யன்.
Healing, *s.* பரிகாரம், வைதது யம்
Healing, *adj* சுகப்படுதது கிற, சுகமாகுகிற, பரிகரிகிற
wound, ஆறிப்போகிறபுண், ஆறக்கூடியபுண்
medicines, கைகண்டமருந்து, நல்லவிழ்தம்.
Health, *s* சுகம், சௌக்கியம், ஆரோக்கியம், சொஸ்தம்
prosperity, happiness, செல்வம், சுகவாழவு
Healthful, *adj* சுகமான, சௌக்கியமுள்ள, சொஸ்தமுள்ள, ஆரோக்கியமான.
Healthfully, *adv* சுகமாய், சொஸ்தமாய், சௌக்கியமாய்
Healthfulness, *s.* சுகமுடையதன்மை, சுகசௌக்கியம்
Healthily, *adv.* சுகமாய், சௌக்கியமாய்.
Healthiness, *s* சுகம், ஆரோக்கியம், சௌகக்கியம்
Healthy, *adj* நோயற்ற, சுகத்துக்கேதுவான, ஆரோகியத்தரக்கூடிய
constitution, சுகசரீரம், நல்லுடம்பு
person, சுகதேகி, நோயில்லாதவன்.
Heap, *s* குவியல், கும்பல், போர், சூடு.
of rubbish, குப்பைக்குவியல்
Heap, *v a* குவிக்கிறது, சேர்க்கிறது, சேகரிக்கிறது, சம்பாதிக்கிறது
Hear, *v* கேட்கிறது, காதுகொடுத்துக்கேட்கிறது.
as try a case in law, நியாயங்கேட்டல், வியாக்கியம்விசாரித்தல்
of, கேள்விப்படுதல்
Hearer, *s* கேட்கிறவன், கேள்விச்செவியன்.
Hearing, *s* கேள்வி, கேள்விமூலம்,
as judicial trial, நியாயவிசாரிப்பு, கேசுவிசாரணை.
Hearken, *v a* கேட்கிறது, உற்றுக்கேட்கிறது, கவனிக்கிறது
Hearkener, *s* செவிகொடுப்போன், கேட்கிறவன்
Hearse, *s* பாடை, இறந்தாரைகொணடுபோந்தூம்பா.
Heart, *s* இருதயம், இதயம், உள்ளம், நெஞ்சம, உட்புறம், தைரியம், திடாரிக்கம், விருப்பம், வாஞ்சை.
a broken heart, உடைந்தமனம். உள்ளுடைந்தநெஞ்சம்
a hard heart, வன்னெஞ்சம், கெட்டிநெஞ்சு
of a tree, வைரம், மரத்தினுட்புறத்துநடு
Hearsay, *s* கேள்வி, ஊர்ப்பேச்சு, காதுவிசேஷம்
Heartburn, *s* குலையெரிவு, ஈரற்கொலையெரிவு.

Hasty, *adj* சுறுசுறுப்பான, தீவிரமான, கண்மூடித்தனமான, பதைபதைப்பான,

Hasty-pudding, *s A pudding made of milk and flour boiled quick together as also of oatmeal and water boiled together,* பாலும்மாவுங்கலந்தகூழ், ஒருவகைச்சாப்பாடு

Hat, *s* தொப்பி, குல்லா

Hatch, *v a* குஞ்சுபொரிக்கிறது

Hatches, *s* கப்பலில் அறைக்கதவு

Hatchet, *s* கைக்கோடாலி, சிறுகோடாலி.

Hatchway, *s* கூபல்துவாரம்

Hate, *s* பகை, உட்பகை, குரோதம்

Hate, *v a* பகைக்கிறது, வெறுக்கிறது, பகைசாதிக்கிறது, அன்புக்குமாறுனகுணத்தைப்பாராட்டுகிறது

Hateful, *adj* பகையான, வெறுப்பான

Hatefully, *adv* பகைபடத்தக்கவிதமாய், பகையாய்

Hatefulness, *s* பகை, பகைமை

Hater, *s* பகைஞன், பகையாளி, எதிரி, விரோதி.

Hatred, *s* பகை, உட்பகை, விரோதம்.

Haughtily, *adv.* இறுமாப்பாய், அகந்தையாய், மேட்டிமையாய்

Haughtiness, *s* இறுமாப்பு, அகந்தை, இடும்பு, கிறுது, கெறுவம், பெரியதனம்

Haughty, *adj.* கெறுவமுள்ள, இறுமாப்பான, அகந்தையுள்ள, பெருமையான.
conduct, இடும்பானவேலை. கெறுவநடை
to be haughty, இறுமாப்புக்கொள்ளுதல், அகந்தையாகுதல், செருக்குக்காட்டுதல்

Haul, *v a* இழுக்கிறது, சாம்புகிறது, வலிக்கிறது

Haunch, *s* இடுப்பு, சந்து, பின்னந்துடை.

Haunt, *s* வாலாயமாயிருக்குமிடம்

Haunt, *v n* சஞ்சரித்தல் வாசஞ்செய்தல், நடமாடுதல், ஊடாடுதல்

Haunting, *n* சஞ்சாரம், நடமாட்டம், தொடர்ந்துபின்செல்லுகை

Hautboy, *n* நாகசுரம்

Hauteur, *s* எடுப்பு, அகந்தை, மேட்டிமை, இறுமாப்பு, செருக்கு

Have, *v a* உடைத்தாயிருக்கிறது, வைத்திருக்கிறது, இருக்கிறது
to contain, கொள்ளுதல், தரித்தல், பிடித்தல்
a bearing on, தாவுதல், சுட்டிநிற்றல், தாங்கிநிற்றல்,
in charge, &c. கைக்கொளளுதல், கைவசங்கொள்ளுதல், விசாரிப்பில்வைத்திருத்தல்
place, தங்குதல்.
on, பூணுதல், தரித்தல், இடுதல், போடுதல்,
patience, பொறுத்திருத்தல் சகித்திருத்தல், அமர்ந்திருத்தல்
to buy, கொள்ளுதல், வாங்குதல்

Haven, *s.* குடாக்கடல், துறைமுகம், அடைக்கலம்.

Havock, *s* பாழ், நாசம், அழிவு, கொள்ளை
to make havock, நாசப்படுத்துதல், சூறையாடுதல்.

Hawk, *s* இராசாளி, பருந்து, வல்லூறு

Hawk, *v* காறுகிறது, விலைகூறுகிறது
and spit, காறித்துப்புதல்

Hawker, *s* விலைகூறிவிற்போன, அங்காடிகூறுவோன், இராசாளி, வேட்டைக்காரன்

Hawking, *s* இராசாளிவேட்டை, காறிதுப்பல், கூவிவிற்றல்

Hawse, *s* நங்கூரத்துக்குங்கப்பலுக்கும் நடுவேயுள்ள இடைவெளி

Hawser, *s* நங்கூரக்கயிறு

Hawthorn, *s* ஓர்முட்செடி

Hay, *s* அரிந்துகாய்ந்தபுல்

Haycock, *s* காய்ந்தபுல்லின்போர்

Hazard, *v a* துணிந்துவிழுகிறது, துணிந்தடிக்கிறது, மோசதுக்கேதுவாய்ச்செய்கிறது
an experiment, துணிந்துசோதித்தல், இரண்டுக்குமொட்டிப்பார்த்தல்

Hazarder, *s.* துணிவுள்ளோன் துணிந்துசெய்வோன், துணிகரக்காரன்

Hazardous, *adj* மோசமான, மோசதுறையான, சேதத்துக்கேதுவான

Hazardously, *adv.* மோசமாய், மோசதுக்கேதுவாய், விழுந்தடிதபோக்காய்

Haze, *s* பனி, மூடுபனி, மப்பு, புகை.

Hazel, *s* ஓர்செடி

Hazel, *adj* கபிலநிறமான, மங்கல்வருணமுள்ள
colour, புகர்நிறம், கபிலவருணம்

Hazy, *adj* மூடுபனியுள்ள, பனிமங்கலான

He, *pro* அவன், இவன்.
as male, ஆண்

Head, *s* தலை, சிரசு, சென்னி
of a subject, பொழிபு, கருததலை
of a class, வகுப்பிலேமுதறபிள்ளை, தலைமாணாக்கன்

Heavy, *a*. கனமான, பாரமான, பளுவுள்ள, துக கமுள்ள, வருத்துகிற, சோமபலான, சுறுசுறுப் பில்லாத.
heavy as cake, bread, அடைத்த.
head, தலைக்கனப்பு
as sad, துக்கமான, சலிப்பான
as dull, மந்தமான, விறுமாத்தியுள்ள
rain, பெருமழை, கனமழை, உரத்தமழை.
to be heavy, கனங்கொள்ளுதல், பாரப்படுதல், பாரித்தல, கனத்தல்
Heavy, *adv* மகாபாரமாய்
Heavily, *adv* பாரமாய், கனமாய், தூக்கமாய், துகமாய், உபத்திரமாய், பளுவாய்
Heaviness, *s* பாரம், பளுவு, கனம்
of system, திமிர், ஆயாசம், மதம், சோம்பல், கனை
Hebdomadal, Hebdomadary, *a* கிழமைதோறுமுள்ள, வார த்துக்குவாரமாகிய
Hebetate, *v a* மழுக்குகிறது, மந்தமாக்குகிற து, திமிராக்குகிறது,
Hebraic, *adj* எபிரேயபாஷைக்குரிய
Hebraism, *s* எபிரேயபாஷைநடை.
Hebrew, *s* எபிரேயன், எபிரேயபாஷை.
Hebrew, *adj* எபிரேயருக்குரிய.
Hecatomb, *s* நூறுஆடு அல்லது நூறுமாடுபலியி டுகிறஒருபலி, ஒருயாகம்
Hectic, *adj* இடைவிடாத, விடாத, தினந்தோறு முள்ள
fever, விடாக்காய்ச்சல், தினக்காய்ச்சல், அணுதின சுரம்.
Hector, *s* வம்பன், இழுபறிக்காரன், சக்கத் தன்
Hedge, *s* வேலி, அடைப்பு
Hedge, *v a* வேலியடைக்கிறது
Hedgebill, *s* கைக்கத்தி, சூரிகத்தி
Hedgehog, *s* முள்ளம்பன்றி
Hedgerow, *s* வேலி
Hedger, *s* வேலியடைப்போன்
Heed, *s* கவனம், சிந்தனை, எணணம், நினைப்பு
as care, attention, கவலை, பத்திரம், உசார்
as caution, suspicious watch, விழிப்பு, குறுகு றென்றுபார்த்திருக்கிறவிழிப்பு, எச்சரிக்கை
as regard, respectful notice, பயபத்தி, அச்ச ம், அஞ்சிக்கை
Heed, *v a* கவனிக்கிறது, சிந்திக்கிறது, எணணு கிறது, நோக்குகிறது, கவனித்துப்பார்க்கிறது.
Heedfully, எண்ணிக்கையாய், எச்சரிக்கையாய், க வனமாய்
Heedfulness, *s* நினைப்பு, எணணிக்கை, கவனம்
Heedless, *adj* சிந்தனையற்ற, எணணுமையுள்ள, கவனமற்ற, நேர்ந்தபடியான, நேர்த்தபோக கான
person, எணணுதவன், பெருமோடி.
Heedlessly, *adv*. நேர்ந்தபடி, எண்ணிக்கையில் லாமல்
Heedlessness, *s*. அசட்டை, கேளாமை, பராக்கு, நேர்ந்ததபோக்கு, பெருமோடித்தனம்.
Heel, *s* குதிகால், குதிங்கால
to take to one's heels, ஓடுதல, கொண்டோடு தல. வைத்துவாங்கிப்பறத்துபோதல்
Hegira, *s* மக்கதேசத்தைவிட்டுமகம்மதுபுறப்ப ட்டநாள் அதுகிறிஸ்துவின் சகாஉடம் ஆண்டு ஆடிமீ-ஹூடை, மகம்மதாப்தம்
Heifer, *s* கடாரிக்கன்று, கடாரி.
Heigh'ho, *int* ஓகோ, ஐயோ, ஐயையோ.
Height, Hight, *s* உயரம், உன்னதம், உச்சம், உயர்ச்சி, உயர்வு
of a disease, உக்கிரம், மும்மூரம்,
Heighten, *v a* அதிகரிபபிக்கிறது, கதிபபிக்கிறது, மிகுக்கபபண்ணுகிறது, உயர்த்துகிறது
Heightening, *s* அதிகரிபபு, மிகுதி, உயர்வு, உயர் த்துகை
Heinous, *adj* மிகுதீங்கான, மகாஅக்கிரமமான, கொடுமையுள்ள, துஷ்டதனமுள்ள
sinner, படுபாவி, கொடும்பாவி, துரோகி
crime, கொடியபாவம், பாதகம், துரோகம, ம காதோஷம்
Heinously, *adv* அருவருக்கத்தக்கதாய், ஆகாமி யமாய், அசங்கிதமாய்
Heinousness, *s* அருவருக்கப்படுந்தன்மை, து ஷ்டத்தனம், ஆகாமியம், கொடுமை.
Heir, *s* சுதந்தரவாளி, சுதந்தரன், உரித்தான வன், உரிமைக்காரன்
apparent, இளவரசன், சுதந்தரத்துக்குரிமைக் காரன்
presumptive, சுதந்தரத்துக்குச்சொந்தமாகத் தக்கவன்
Heiress, *s* உரிமைக்காரி, சொந்தக்காரி, சுதந்தரி.
Heirloom, *s* உரிமையாஸ்தி, உடைமை

Heartburning, *s* கொஇயெரிவு, உட்பகை, வயிற்றெரிச்சல்.
warmheartedness, மாநேசம், வைராக்கியநேசம், உற்றசிநேகம், நற்சிநேகம்
faintheartedness, நெஞசிளக்கம், ஏழைநெஞசு,
Heartfelt, *adj* நெஞசிலேகுத்துகிற, உள்ளுறைகிற, கண்ணிலேகரிக்கிற
Heartrending, *adj* மனமுறிவான, நெஞசைபபிளக்கிற, வேசாறலான, சலிபபுள்ள
Hearth, *s* அடுப்பு, உலை, உலைக்களம்
Heartily, *adv* உற்சாகமாய், தாராளமாய், மனதாரமனப்பூருவமாய்
Heartiness, *s* தாராளம், மனத்தாராளம்
Heartless, *adj* பயமுள்ள, விருப்பமற்ற, தைரியமற்ற
Heartlessly, *adv* கோழையாய், மனலோடாயமாய், சோர்வாய்.
Heartlessness, *s* இரக்கமில்லாமை, அதைரியம், வாட்டம், வதக்கம்
Hearty, *adj* களிப்புகொண்ட, உண்மையுற்ற, கபடற்ற, சுகசௌக்கியமுள்ள
laughter, கெக்களிபபு, சிரிப்பு.
Heat, *s* சூடு, வெப்பம், வெம்மை, உஷ்டணம் காய்ச்சல், அனல், —அழலை
prickly, வேர்க்குரு
of the body, அழல், கொதிப்பு, புழுக்கம்
heat of a fever, காய்ச்சலினுஷ்டணம், சுரத்தின்கொதிப்பு.
of passion, விகாரம், மனவெப்பம்.
of spices, &c உறைப்பு, காரம்
of weather, புழுக்கம், சுள்ளாப்பு, வெப்பம்
of battle, மூனைமுகம், போர்மூனை, யுத்தமும்மூரம்
internal, அழலை, உள்வேகம்.
fermentation, effervescence, கொதி, கொதிப்பு, வேகம்
ardour of thought or eloquence, பிரசங்கதீரம்,
Heat, *v. a* சுடுகிறது, அழற்றுகிறது, காந்துகிறது, அனற்றுகிறது.
Heat, *v. n* வேகிறது, வெநதுபோகிறது, சுடுகிறது, காய்கிறது.
as iron, காய்தல்.
as water, சுடுதல, காய்தல்,
Heater, *s.* சுடுவோன்
Heath, *s* ஒருபூண்டு, செடிநெருஙகியவிடம், வனம், மைதானம்
Heathcock, *s* காட்டுகோழி
Heathen, *s.* அஞஞானி, அகியாணி, விகிரகவணக்கஞ்செய்வோன், தேவனேவணங்காதவன்.
Heathen, *adj* விகிரகவணகத்துகுரிய, அவபத்திகுரிய
Heathenish, *adj* தெய்வவணகமில்லாத, அகியானத்துகுரிய
Heathenishly, *adv* விகிரகபத்தியாய், அவபத்தியாய்
Heathenishness, விகிரகபத்தியின்தன்மை, அகியானத்தனம்
Heathenism, *s* அஞஞானம், அகியானம்
Heathenize, *v. a* அஞஞானத்துகுச்சரிவரப்பண்ணுகிறது, அவபதியாக்குகிறது
Heather, *s* ஓர்பூண்டு
Heatless, *adj* வெப்பமில்லாத
Heave, *v a* தூகுதல், எடுத்தல், ஏற்றுதல், கிளப்புதல்
the lead, விழுதுவிடுதல், கயறுவிடுதல், ஈயம்விட்டுஆழம்பார்ததல்.
heave to, சாயவிடுதல், கரையேறவிடுதல்.
Heave, *v n.* பொருமுதல், வீங்குதல்
from nausea, ஓகாளித்தல், நெஞசைகுமட்டுதல், புரட்டுதல்
as billows, அலையெறிதல், திரைபொங்குதல் கொந்தளித்தல
Heaven, *s* மோட்சம், பரமபதம், முத்தி, பரமண்டலம்
as the firmament, வானம் ஆகாயமணடலம், அண்டம்.
as the Supreme Being, கடவுள், பரன், பிரான்
as Elevation, Sublimity, உன்னதம், ஆழம்
Heavenly, *adj* பரத்துகுரிய, திவ்வியமான, ஆகாய, பரமபதத்தில்வாசஞசெய்கிற.
delight, பரமானந்தம், பேரின்பம்
minded, தேவபத்தியுள்ள, பரமசிந்தையுள்ள
mindedness, தெய்வபக்தி, பரமசிந்தை, ஞானஜூபோகம்
Heavenly, *adv.* மோட்சத்துகுரியவிதமாய், பயபத்தியாய், ஆனந்தமாய்.
Heavenward, *adv* மோட்சத்துகுநேராய்
Heaving, *pr and s* தள்ளுகிற, உயர்ததுகிற, எஃகுகிற, தவிப்பு

Heirship, *s* உரிமை,உடந்தை, சுதந்திரத்துவம்
Heliacal, *adj* சூரியகிரணத்திலிருந்தெழுமபுகிற, சூரியகிரணத்துக்குள்ளழுந்துகிற.
Heliacally, *adv* சூரியகிரணத்தினின்றுபுறப்படுகிறதாய்
Heliocentric, *adj* சூரியமத்தியிற் பார்வைசெலுத்த அதினின்றுகாணும் யாதானுமோர்கிரகத்துக்குரிய
Hell, *s* நரகம், கொல்லாநோய், நரகநோய்
as grave, சவக்குழி, பிரேதக்குழி, மரித்தோர்ஸ்தலம்
as devil, பேய், பிசாசு
Hellebore, *s* ஓர்பூண்டு
Hellenic, *adj* கிரேக்கருக்குரிய, கிரேக்க.
Helm, *s* சுக்கான்
Helmet, *s.* தலைச்சோடு, தலைக்கருவி, தலைச்சீரா, தலைப்பாகை
Help, *s* துணை, உதவி, சகாயம், ஒத்தாசை, ஆதரவு, உபயோகம், உபகாரம்.
Help, *v a* உதவுகிறது, துணைசெய்கிறது, ஆதரிக்கிறது உபசரிக்கிறது
I can not help it, நான் அதற்கு என்னசெய்வேன்.
I can not help crying, நான் அழாமலிருக்கக்கூடாது
Helper, *s.* சகாயி, சகாயஸ்தன், உதவிக்காரன், துணையாளி, உபகாரி, கூட்டாளி
Helpful, *adj* துணையான, துணைசெய்கிற, ஒத்தாசைசெய்கிற
Helpfulness, *s* உதவி, துணை, ஒத்தாசை
Helpless, *adj* துணையில்லாத, கெதியற்ற, அந்தரமான, உதவியற்ற, தனித்த
person, ஏழை, தனித்தவன், அநாதன்
to be helpless, தனித்தல், அந்தரமாதல், உதவியற்றிருத்தல்.
Helplessly, *adv* துணையின்றி, உதவியில்லாமல்.
Helplessness, *s* கெதியில்லாமை, ஆதரவின்மை.
Helpmate, *s* கூட்டாளி, தோழன், துணை, சகன் சகி
Helve, *s.* கோடரிப்பிடி, கோடாலிப்பிடி
Hem, *s* முன்றானை, வஸ்திரத்தின்ஓரம், சீலைமடிப்பு
Hem, *v a* மடித்துத்தைக்கிறது, ஓரம்வைத்துத்தைக்கிறது, விளிம்புதைக்கிறது
in, அடைத்தல், வளைத்தல்.
Hem, *v n* செருமுகிறது. அடைக்கிறது.
Hemiplegy, *s* பாரிசவாதம், பக்கவாதம்.
Hemisphere, *s* அரையுணடை, பாதியுண்டை, அர்த்தகோளம், அர்த்தவிருத்தம்.
eastern, கீழ்பாதியுண்டை,குணகோளார்த்தம
western, மேல்பாதியுண்டை,குடகோளார்த்தம்.
northern, வடபாதியுண்டை, உத்தரகோளார்த்தம்.
southern, தென்பாதியுணடை, தக்ஷணகோளார்த்தம்
Hemispheric, Hemispherical, *adj* பாதியுண்டையான
Hemistich, *s* அரையடி, குறையடி
Hemitone, *s* அரைச்சுதி, அர்த்தசுதி.
Hemlock, *s* ஓர்நச்சுச்செடி, ஓர்மரம்
Hemoptysis, *s* இரத்தநோய், இரத்தகாசம், இரத்தவாந்தி
Hemorrhage, *s* இரத்தரோகம்
Hemorrhoidal, *adj* மூலக்கிரந்திக்கடுத்த, மூலகாங்கையான,
Hemorrhoids, *s* (*plu*) இரத்தமூலம், மூலகிரந்தி, மூலவியாதி, மூலரோகம்
Hemp, *s.* சணல்
Hempen, *adj* சணலாற்செய்த,சணலால்நெய்த, சணல்நூலாகிய.
Hen,*s* கோழிப்பேடு,பெடைக்கோழி,பெட்டை.
coop, கோழிகூடு
Henbane, *s* ஓர்நச்சுப்பூண்டு.
Henpecked, *adj* பெண்சொற்கேட்கிற, பெண்டாட்டிக்கமைந்த
Hence, *adv* இவ்விடத்திலிருந்து, இனி, இனிமேல், இதுமுதல், ஆதலால், அப்பாலே, ஆகவே,ஆனதால்
1 *From this place to another*, இவ்விடத்திலிருந்து, *as, the Almighty will not drive us hence*,கடவுள்இங்கிருந்துநம்மைத்துரத்தார்.
2 *Away; to a distance;* தூர, எட்டி, *as, be not found here, hence with your little ones*, இங்கேதலைகாட்டாதேயுங்கள், உங்கள்குஞ்சுகுழந்தைகளோடு தூரக்கடக்கப்போங்கள்
3. *From this time; in the future*, இனிமேலுக்கு, *as, a thousand years hence*, ஒரு ஆயிரம்வருஷத்துக்குமேற்பட.

4. *For this reason; in consequence of this,* இதுக்காக, இதினிமித்தம், *as, Hence perhaps it is that Solomon calls the fear of the Lord the beginning of wisdom,* இதினிமித்தமாக்கும் சாலோமோன் கடவுளுக்குப்பயப்படுவதை ஞானத்துக்காரம்பமென்றான்.

5 *From this cause or ground,* இதினால், இதுகாரணத்தை முன்னிட்டு

Henceforth, Henceforward, *adv* இதுமுதல், இனிமேல், இதுதொட்டு, பின்னே.

Hepatic, *adj* கல்லீரலுக்கடுத்த

Hepatic affections, ஈரலுக்கடுத்தநோய், ஈரல நோய்

Heptagon, *s.* ஏழுகோணம், சத்தகோணவடிவம்

Heptagonal, *adj* ஏழுகோணமான, சத்தகோணமுள்ள

Heptangular, *adj* ஏழுகோணமுள்ள

Heptarchy, *s* ஏழுபேரிராசரிக்கம், ஏழிராசாங்கங்கொண்டசமஸ்தானம்

Her, *(pro)* அவளுடைய, அவளது, அவளின், அவளை.

Herald, *s* தூதன், பிரசங்கி, கட்டியக்காரன், அறிக்கைகூறுவோன், விளம்பரங்கூறுவோன்.

Herald, *v a.* கூறுகிறது, பிரசங்கிக்கிறது, விவரிக்கிறது, கட்டியகாரனுடையவேலைசெய்கிறது

Heraldic, *adj* தூதனுக்குரிய, கூறுகிற, அறிக்கைகூறுகிற

Heraldry, *s* தூதனுடையதொழில், விருதுநூல், பாரம்பரைக்குறி, விருதடையாளங்கள், விருதுகள்

Herb, *s* பூண்டு, பயிர், கீரை

Herbaceous, *adj.* பயிருக்கடுத்த.

Herbage, *s* இலை, தழை, குழை, பயிர், பூண்டு, பத்திரம், புல்லு

Herbal, *s* தாபரசாத்திரம், புற்பூண்டுகுணங்குறிப்பெசுகிறநூல்

Herbalist, *s* தாபரசாத்திரி, பயிர்வித்தகன்

Herbescent, *adj* கீரையாய்முளைக்கிற.

Herborize, *v. n.* பயிரியல்விநோதங்கொண்டாடுகிறது, பூண்டுசேர்க்கிறது

Herborist, *s* பயிரியல்விநோதன், பூண்டுசேர்ப்பவன்

Herculean, *adj.* வீமனை, வீமன்போன்ற, அதிபலமுள்ள, பெரிய, வருத்தமான

Herd, *s* மிருகக்கூட்டம், இனம், கணம், மந்தை, திரள்

Herd, *v n* கூடிக்கொள்ளுகிறது, திரளுகிறது

Herdsman, *s* இடையன், மேய்ப்பன், ஆயன்

Here, *adv* இங்கே, இவ்விடம், இங்ஙனம், ஈண்டு, இவண், ஈங்கு

